08.வாழ்விற்கு மின்சாரம்

உரு 01

உரு 02

இவற்றுள் உடலுழைப்பு , நேரம் என்பவற்றை குறைத்து வேலை செய்யப்படும் முறை எது என வினவப்பட்டால் உமது விடை உரு 02 இல் காணப்படும் முறை என்பதாக அமையும். காரணம் இங்கு மின் சக்தி பயன்படுத்தப்படுவதாகும். வீடுகளில் மின்னைப் பயன் படுத்தும் சந்தர்ப்பங்களின் உருக்களைத் தேடி பயிற்சிக் கொப்பிகளில் ஒட்டுக.

மின் உற்பத்தி

மின் உற்பத்தி செய்யும் எளிய முறைகள்

மின்னை உற்பத்தி செய்வதற்காக டைனமோ , மின்பிறப்பாக்கி , உலர்மின்கலம் , சூரியப்படல் போன்றன பயன்படுத்தப்படுகின்றன .

சைக்கிள் டைனமோ

சூரியப்படல்

உலர் மின்கலங்கள்

- உமது வீட்டில் உள்ள மூத்தவர் ஒருவரின் உதவியுடன் செயற்பாடு 8.1 இல் ஈடுபட்டு எழுமிச்சம் பழத்திலிருந்து மின்னைப் பிறப்பிக்கும் செயற்பாட்டை பரிசோதிக்க .
- இங்குருவாகும் மின்னோட்டம் மிகச் சிறிதளவானதனால் இதில் உருவாகும் மின்னோட்டத்தை அளந்து கொள்ள கல்வனோமானி எனும் கருவி பயன்படும்

கம்பிச் சுருளின் மூலம் மின்னை உற்பத்தி செய்தல்



1. உருவில் சட்டக் காந்தம் , கல்வனோமானி , கம்பிச் சுருள் என்பவற்றைக் குறிக்க?
2. கம்பிச் சுருளின் ஊடாக காந்தத்தை முன் பின்னாக அசைக்கும் போது கல்வனோமானியில் ஏற்படும் மாற்றம் என்ன ?
3. இம் மாற்றத்துக்கான காரணம் யாது?
4. இம் முறையில் மின் உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

5 இவ்வாறு மின்னை பிறப்பிக்கலாம் என்பதை முதலில் காட்டியவர் யார் ?

சிறிய மின்வலு நிலையமொன்றை அமைப்போம்



1. தரப்பட்டுள்ள அமைப்பைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்ய யாது செய்ய வேண்டும் ?
2. இலங்கையில் நீர்மின் வலுவை அறிமுகப்படுத்தியவர் யார் ?
3. இலங்கையில் கீழ்வரும் மின் வலு நிலையங்கள் எங்கு அமைந்துள்ளன?
   - நீர் மின் வலு நிலையம்
   - அனல் மின் நிலையம்
   - எரிபொருளினால் செயற்படும் மின் வலு நிலையம்
   - காற்று மின் வலு நிலையம்